மதுரை மாவட்டம் உசிலம்பட்டி மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை திரு முத்தையா எம்.எஸ்.சி பி.எட் எம்.ஃபில்

ந.க.எண்.7288/அ1/2005

நாள் .. 23 .04.2019

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வித்துறை– திரு ந. அருள்குமார் என்பவர் 05.03.1999 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வழங்குதல் சார்பு |
| பார்வை | 1. உசிலம்பட்டி மாவட்டக்கல்வி அலுவலர் செயல்முறைகள் ந.க.எண். 7288/அ1/2005 நாள் .02.2006<br>2. அரசாணை (நிலை ) எண் 80 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 02.03.2016<br>3. அரசாணை (நிலை எண் 100 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 01.08.2018<br>4. அரசு கடித(1D)எண் 764 பள்ளிக்கல்வித்துறை நாள் 03.12.2018<br>5. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி ) அவர்களின் செயல்முறைகள் நி.மு.எண்.18412/ ஜே3/ 2017 நாள் 19.12.2018 |

---- ---

பணியில் இருக்கும் போது காலமான அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டப்படி திரு ந. அருள்குமார் என்பவர் இளநிலை உதவியாளராக 05.03.1999 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பள்ளிக்கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப்பணி அமர்த்தப்பட்டவரின் தந்தை திரு ஆர். நடராஜன் என்பவர் 14.11.1991 அன்று காலமானார் என்றும் அவர் தகுதிக்காண் பருவம் முடித்தவர் என்றும் அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும் அவரது மகன் திரு ந. அருள்குமார் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணபத்திருந்தார் என்றும் அவரது பிறந்த நாள் 11.05.1976 என்றும் அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்பு பொது தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் இவருக்கு பணி வாயப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதார்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்து அன்னாரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கிடுமாறு பார்வை 1–ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி உரிய வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டது

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி மாவட்டக்கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் ( பணியாளர் தொகுதி ) அவர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி இளநிலை உதவியாளராக பணி அமர்த்தப்பட்ட திரு ந. அருள்குமார் என்பவரை தமிழ்நாடு

அமைச்சுப்பணியில் பள்ளிக்கல்வித்துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 05.03.1999 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் அரவது பணியினை பார்வை 3–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டிய நிலை எழவில்லை என்பதால் தனியர் திரு ந. அருள்குமார் என்பவரின் பணியினை பார்வை 2–ல் கண்ட அரசாணையின்படி 01.02.2016–க்கு முந்தைய நிகழ்வுகள் அனைத்தும் வரன்முறை செய்யப்பட்டு விட்டநிலையில் நியமன அலுவலரளவில் அதனை உறுதி செய்ய செயல்முறை ஆணையினை வெளியிடவும் தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் அதன் அ.சா.கு.எண் 20307/ட்டி1/2018–1 நாள் 27.11.2018–ல் இசைவு பெறப்பட்டுள்ளது.

மேற்கூறிய தனியருக்கு அவரது தந்தை அரசுப்பணியில் ஸ்ரீரெங்கபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணியில் இருக்கும் போது காலமான திரு ஆர். நடராஜன் என்பவரின் மகன் திரு ந. அருள்குமார் என்பவர் கருணையின் அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளராக பதவியில் 05.03.1999 முற்பகல் முதல் பணிபுரியும் அவரது பணியினை வரன்முறைப்படுத்திட அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பார்வை 3–ல் காணும் அரசாணையின் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி தனியரின் பணியினை நியமன நாளான 05.03.1999 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவைகளை விதிகளின்படி தகுதிக்காண் பருவம் முடித்து ஆணை வழங்கிய பின்னர் பெறத்தகுதியுடையவராகிறார். பணிவரன்முறை செய்யப்பட்ட அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த பள்ளித்தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்

23/4/19

மாவட்டக்கல்வி அலுவலர்
உசிலம்பட்டி

23/4/19

இணைப்பு பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச்சான்றுகள்

பெறுநர்

திரு ந. அருள்குமார் இளநிலை உதவியாளர் அரசு மேல்நிலைப்பள்ளி கண்டமனூர், தேனி மாவட்டம்

நகல் தலைமை ஆசிரியர் அரசு மேல்நிலைப்பள்ளி கண்டமனூர்.தேனி மாவட்டம்

நகல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர், மதுரை/ தேனி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

30 APR 2019